செ.வெ.எண்:16 நாள்:07.10.2021

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் போலுப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.1 கோடியே 25 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள ஆக்ஸிஜன் உற்பத்திக் கலனையும், மற்றும் ஓசூர் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.95 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள ஆக்ஸிஜன் உற்பத்திக் கலனையும் டெல்லியிலிருந்து காணொலி காட்சி வாயிலாக இன்று (07.10.2021) திறந்து வைத்தார்கள்.

ஓசூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.95 இலட்சம் மதிப்பில் 1 நிமிடத்திற்கு 500 லிட்டர் ஆக்ஸிஜன் உற்பத்தி செய்யும் கலன்களை அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நாடு முழுவதும் உள்ள அரசு தலைமை மருத்துவமனைகளில் பாரத பிரதமர் பி.எம்.கேர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பிராணவாயு கலன்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததையடுத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் ஓசூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஆக்ஸிஜன் உற்பத்தி இயக்கத்தை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நாடு முழுவதும் உள்ள அரசு தலைமை மருத்துவமனைகளில் பாரத பிரதமர் பி.எம்.கேர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பிராணவாயு மையங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போலுப்பள்ளி அருகே உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.1 கோடியே 25 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளதையும், ஓசூர் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.95 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளதையும் இன்று திறந்து வைத்தார்கள்.

ஓசூர் மருத்துவமனையில் உள்ள பிராணவாயு உற்பத்தி கலன் இன்று துவக்கப்பட்டுள்ளது. இந்த பிராணவாயு கலன்கள் மூலம் 1 நிமிடத்திற்கு 500 லிட்டர் ஆக்ஸிஜன் உற்பத்தி செய்ய முடியும். இதனால் அரசு மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் நபர்களுக்கு ஆக்ஸிஜன் தங்கு தடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஓசூர் சார் ஆட்சியர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா இஆப., பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.முரளி, ஓசூர் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் மரு.பூபதி, கண்காணிப்பாளர் திருமதி.ஜி.வசந்தி, வட்டாட்சியர் திரு.கிருஷ்ணமூர்த்தி, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**